எம்.சி.ஓ.பி எண்: 14/2020 தேதி: 26.11.2025

எ,மசா. : 1

பெயர் : சிவபிரகாஸ்

த/பெ. : ராஜகுட்டி

வயது : 57

**<u>சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்</u>**

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்து சமயத்தில் ஒரு பைக் முன்னால் சென்றது என்றாலும் அதற்கு முன்னால் இறந்து போனவர் சென்றார் என்றாலும் அந்த பைக்கு பின்னால் என் பேருந்து வந்தது என்றாலும் சரியல்ல. ஒரு வண்டி முந்தி செல்ல வேண்டுமானால் வலது பக்கம்தான் முந்தி செல்லவேண்டும். நான் எனக்கு வலது பக்கமாக சென்றுகொண்டிருந்த அந்த வண்டியை இடித்துவிட்டேன் என்றால் இல்லை. இருசக்கரவாகனத்தின் கைப்பிடியில் நான்மோதியதால் அந்த பெண் நிலைதடுமாறி விழுந்துவிட்டார் என்றால் சரியல்ல. எனவே எனது வாகனத்தின் இடது பக்க சக்கரம் அவர் தலைமீது ஏறி நின்றுவிட்டது எ்னறால் இல்லை. அந்த பெண் போட்டு இருந்த தலைக்கவசம் தெரித்து விழுந்துவிட்டதுஎன்றால் அவர் தலைக்கவசம் அணியவில்லை. அவர் தலைக்கவசம் அணியவில்லை என்று எந்த ஆவணத்திலும் கூறவில்லை. அவர் பையிலிருந்த செல்போன் தெரித்து விழுந்துவிட்டது எ்னறால் சரியல்ல. புகாரை வைத்துதான் எப்ஐஆர் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது பொய்யானது. அந்த பெண்ணுக்கு காயம் வலது பக்கம் ஏற்பட்டுள்ள காரணத்தால் நான் வலது பக்கம் சென்று அந்த பெண்ணை இடித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் என்னுடைய சத்தியபிரமாணவாக்குமூலத்தில் அந்த பெண் வந்து இடித்ததாக கூறியுள்ளது தவறு என்றால் சரியல்ல. வரைபடத்திலும் நான்தான் முந்தி சென்றாக காணப்படுகிறது என்றால் இந்த வரைபடத்தை பற்றி தெரியாது. பிரேத பரிசோதனை அறிக்கையில் அவருடைய வலது பக்கம்தான் அனைத்து காயங்களும் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய பேருந்துக்கு மெக்கானிக்கல் ஃபால்ட் இல்லை என்றால் சரி. சின்ன வண்டி என்னை முந்தி செல்லாது என்றாலும் நான் பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய அஜாக்கிருதையால் விபத்து நடந்துள்ளது என்றால் சரியல்ல. நான் உண்மைக்கு புறம்பாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

X

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.